## கழகத் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில்

# நூற்றாண்டு நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் புகழ் போற்றும் ஓராண்டு நிகழ்வுகள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடந்த காணொலிக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மே 24-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை சீரோடும் சிறப்போடும் கொண்டாடுவது குறித்து கழகத் தகவல் தொழில்நுட்ப அணி செயலாளரும் அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜா தலைமையில் 22.5.2023 அன்று காணொலிக் கூட்டம் நடைபெற்றது. இதில் அணியின் இணைச் செயலாளர் டாக்டர் சி.மகேந்திரன், மாநில ஆலோசகர்கள், மாநில துணைச் செயலாளர்கள், மண்டலப் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். தகவல் தொழில்நுட்ப அணி சார்பிலான முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிகழ்வுகள் குறித்த தீர்மானங்களை அணியின் மாநிலத் துணைச் செயலாளர்கள் முன்மொழிந்தனர்.

அத்தீர்மானங்களின் விவரம் வருமாறு:

நோக்கும் இடமெல்லாம் தன் அரிய சாதனைத் திட்டங்களால் நீக்கமற நிறைந்திருக்கும் நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி, தமிழையே உயிர்மூச்செனக் கொண்டு தமிழினத்திற்காகவே வாழ்ந்து, தமிழர்களையும் தமிழ்நாட்டையும் முன்னேற்றிய ஈடுஇணையற்றத் தலைவர் இந்திய அரசியலுக்கு நெருக்கடி ஏற்பட்ட போதெல்லாம் வழிகாட்டிய மூத்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை 2023 சூன் 3ஆம் நாள் தொடங்கி, 2024 சூன் 3ஆம் நாள் வரை ஓராண்டு காலத்திற்கு தமிழ்நாடு முழுவதும் மாவட்டம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் என அனைத்து நிலைகளிலும் சிறப்புறக் கொண்டாடிட கழகத்தின் உயர்நிலை செயல்திட்டக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றிய கழகத் தலைவர் திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்களுக்கு கழகத் தகவல் தொழில்நுட்ப அணி தனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

தன்னால் கழகத்திற்கு என்ன லாபம் எனக் கருதும் உண்மைத் தொண்டனே கழகத்தின் ரத்தநாளம் என்பதை நம் நெஞ்சில் பதித்திருக்கிறார் முத்தமிழறிஞர் கலைஞர். தன் வாலிபத்தையும் வாழ்நாளையும் கழகத்தின் வளர்ச்சிக்கு அர்ப்பணித்து, தோல்விகளிலும் நெருக்கடிகளிலும் கழகத்தைத் தோளில் சுமந்து தாய் போலக் காத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குத் துணையாக நின்ற கழகத்தின் மூத்த முன்னோடிகளை ஒவ்வொரு ஊரிலும் கழக நிர்வாகிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரில் சென்று வாழ்த்தி, பொற்கிழி வழங்கி அவர்களின் தொண்டினைப் போற்றிடும் வகையில் கழகமே குடும்பம் என்றத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ள கழகத் தலைவர் திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்களுக்கு கழகத் தகவல் தொழில்நுட்ப அணி தனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 19 ஆண்டு காலம் திறன்மிகு ஆட்சி நிர்வாகத்தை வழங்கி, தலைநகரம் முதல் கடைக்கோடி கிராமம் வரை தமிழ்நாட்டின் சீரான வளர்ச்சிக்கு வித்திட்ட முத்தமிழறிஞரின் கலைஞரின் திட்டங்களால் பயன்பெறாத பகுதிகளே இல்லை. அனைத்து மாவட்டங்களையும் அதனதன் தேவைகளைக் கருத்தில் கொண்டு வளர்ச்சி பெறச் செய்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைகளை மாவட்டங்கள் தோறும் நிறுவிட, எங்கெங்கும் கலைஞர் என்ற செயல்பாட்டினையும், இளைய தலைமுறையினர் மாணவர் பல்வேறு துறை வல்லுநர்களைக் கொண்டு கருத்தரங்கம், கவியரங்கம், பேச்சுப் போட்டிகள் நடத்திட என்றென்றும் கலைஞர் என்ற செயல்பாட்டினையும், எத்திசை திரும்பினாலும் கழகத்தின் இருவண்ணக்கொடி பறந்திடும் வகையில் ஊர்தோறும் தி.மு.க. என்ற செயல்பாட்டினையும் முன்னெடுத்திருக்கும் கழகத் தலைவர் திராவிட நாயகன் முதலமைச்சர் அவர்களுக்கு கழகத்தகவல் தொழில்நுட்ப அணி தனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

### புகழ் போற்றும் நிகழ்வுகள்!

கழகத்தில் உள்ள அனைத்து அணிகளின் சார்பிலும் ஓராண்டு முழுவதும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாடும் செயல்திட்டத்தினை உருவாக்கி, தலைமைக் கழகத்தின் அனுமதியைப் பெற்று, இளைய தலைமுறையினருக்கு பயன்தரும் வகையில் நடத்திட வேண்டும் எனக் கழக உயர்நிலை செயல்திட்டக் குழுத் தீர்மான வரிகளின் அடிப்படையில், கழகத் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் 2023 ஜூன் 3 முதல் 2024 ஜூன் 3 வரை நூற்றாண்டு நாயகரின் புகழ் போற்றும் நிகழ்வுகள் தளத்திலும் களத்திலும் ஓராண்டு காலத்திற்குத் தொடர்ந்து நடைபெறும் என இந்த காணொலிக் கூட்டம் தீர்மானிக்கிறது.

ஜூன் 3 அன்று கலைஞர் 100 ஹேஷ்டாக் ட்வீட்டுகளை தகவல் தொழில்நுட்ப அணியின் அனைத்து நிர்வாகிகளும், மற்ற அணிகளின் ஒருங்கிணைப்புடன், கழகத்தின் மீதும் கலைஞரின் மீதும் பற்றும் வெறியும் கொண்ட சமூக வலைத்தள செயல்பாட்டாளர்களும் பங்கேற்று சிறப்பான முறையில் ட்ரெண்டிங் செய்வது எனத் தீர்மானிக்க ப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளான ஜூன் 3 அன்று தொடங்கி, தொடர்ந்து 100 மணி நேரங்களுக்கு நூற்றாண்டு நாயகர் கலைஞரின் பன்முகத் திறமைகளை பல்வேறு துறை வல்லுநர்கள், ஆர்வலர்கள் பேசுகின்ற இணைய வழி நிகழ்வுக்குத் திட்டமிடப்பட்டுள்ளது. ஓராண்டு காலத்தில் நூற்றுக்கும் அதிகமான நிகழ்வுகளை இணையம் வழியாக நடத்தி, நூற்றாண்டு நாயகர் கலைஞரின் புகழை உலகம் தழுவிய அளவில் பரப்பிடுவதற்கேற்ப, ஆர்வமுள்ள சமூக வலைத்தள செயல்பாட்டாளர்கள் கழக ஐ.டி.விங்கிடம் பதிவு செய்துகொண்டு, உரிய ஐ.டி.யிலிருந்து நிகழ்வுகளை நடத்த அனுமதிப்பது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

தகவல் தொழில்நுட்பம் செயற்கை நுண்ணறிவு (ARTIFICIAL INTELLIGENCE) வழியாக முத்தமிழறிஞர் கலைஞரின் வாழ்க்கை நிகழ்வுகளை காட்சிகளாக வழங்கும் போட்டி வைத்து, திறமையுள்ள இளந்தலைமுறைக்கு பரிசு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

### கல்வெட்டுகளில் வாழும் கலைஞர்!

கல்வெட்டுகளில் வாழும் கலைஞர் என்ற தலைப்பில் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள அணைகள், அரசு கட்டடங்கள், பேருந்து நிலையங்கள், சிலைகள், வரலாற்று நினைவுச்சின்னங்கள் எனப் பலவற்றிலும் கலைஞர் பெயர் பொறித்த கல்வெட்டுகளையும், அந்த இடங்களையும் புகைப்படமாகவும் வீடியோவாகவும் அந்தந்த மண்டலப் பொறுப்பாளர் வழிகாட்டுதலுடன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களும், தொகுதி நிர்வாகிகளும் எடுத்துத் தர வேண்டும். இதில் சிறப்பாக செயல்படுபவர்களுக்கு பரிசுகள் உண்டு எனத் தீர்மானிக்கப்படுகிறது.

கழகத் தலைமை தீர்மானித்திருப்பதுபோல கணினி, இணைய வசதி கொண்ட படிப்பகங்களைத் தேவையான இடங்களில் திறப்பது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

இளைய தலைமுறையிடம் கொண்டு சேர்ப்போம்!

முத்தமிழறிஞர் கலைஞர் மீது அரசியல் எதிரிகள் சுமத்துகின்ற ஆதாரமற்ற அவதூறுகள், வதந்திகள், பொய்ப்பரப்புரைகளை ஆவணப்பூர்வமாகக் கிழித்தெறிந்து கலைஞரின் உண்மைப் புகழைப் பரவச்செய்யும் கலைஞர் 100 FAQ என்ற புத்தகம் அச்சு வடிவிலும், இணைய புத்தகமாகவும், தனி இணைய இதழாகவும், காட்சி ஒலி வடிவங்களிலும் இன்றைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கப்படும் எனத் தீர்மானிக்கப்படுகிறது.

கலைஞரின் வாழ்க்கையில் முக்கிய இடங்களான திருக்குவளை, திருவாரூர், கல்லக்குடி, திருச்சி, ஈரோடு, சேலம், கோவை, பாளையங்கோட்டை, மதுரை, தஞ்சாவூர், புதுச்சேரி, சென்னை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் 'திராவிடத் தடம் கலைஞர் 100' நிகழ்வுகளை நடத்தி, அதில் தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் மற்றும் சீருடையுடன் பங்கேற்று சிறப்பு செய்வார்கள். மாதம் ஒரு ஊரில் இந்நிகழ்வு எனத் தீர்மானிக்கப்படுகிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அரசின் திட்டங்களால் 8-ஆம் வகுப்பு படித்து திருமண உதவி பெற்றவரின் இன்றைய நிலை, அரசுப் பள்ளியில் பெண் ஆசிரியராக சென்றவரின் தற்போதைய நிலை, இலவச பஸ் பாஸ் கிடைத்ததால் பள்ளிப் படிப்பைத் தொடர்ந்த மாணவரின் அனுபவம், முதல் தலைமுறை பட்டதாரியான மாணவரின் அனுபவம், 108 ஆம்புலன்ஸில் சென்று உயிர் மீட்கப்பட்டவரின் கதை, உயிர் காக்கும் திட்டத்தில் உயிர் மீண்டவரின் நிலை, மாற்றுத் திறனாளிகள், திருநங்யைர் பார்வையில் கலைஞர், சமத்துவபுரத்தில் வசிக்கும் மக்களின் எண்ணம், உழவர் சந்தையில் காய்கறி விற்பவரின் மனநிலை இப்படிப் பல்வேறு துறைகளிலும் உள்ள பயனாளிகளை நேரில் கண்டு கருத்துகளைப் பதிவு செய்து, கலைஞர் கொண்டு வந்த ஒவ்வொரு திட்டமும் இன்று எந்தளவுக்கு எத்தனை பேருக்கு பயன் தந்துள்ளது என்பதை ஆவணப்படுத்தி வீடியோப் பதிவுகளாக வெளியிடுவது எனத் தீர்மானிக்கப்படுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் அரசு முறை பயணமாக சிங்கப்பூருக்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (23.5.2023) டி.வி.எஸ். மோட்டார்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் சுதர்சன் வேணு மலர்கொத்து வழங்கி வரவேற்றார்.

## தி.மு.க. பொறியாளர் அணி

# மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம்!

### பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு!

தி.மு.க. பொறியாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் 27.05.2023 சனிக்கிழமை அன்று பகல் 12.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** 1. தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா,

2. அணியின் வளர்ச்சிப் பணிகள் - குறித்து.

**கு.கருணாநிதி**
செயலாளர்,
தி.மு.க. பொறியாளர் அணி




திருவள்ளூர் மத்திய மாவட்ட ஆவடி வடக்கு பகுதி திமுக இளைஞர் அணி சார்பில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனை கூட்டம் ஆவடி அடுத்த அண்ணா நகரில் பகுதிச் செயலாளர் ஆவடி ஜி.நாராயண பிரசாத் தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் தமிழ்நாடு கொறடா கோவி.செழியன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். உடன் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், தலைமை செயற்குழு உறுப்பினர் நடுகுத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் பிரபு கஜேந்திரன், சி.ஜெரால்டு, மண்டல குழு தலைவர் ஜோதிலட்சுமி, பகுதிச் செயலாளர்கள் ஜி.ராஜேந்திரன், பேபிசேகர், பொன்.விஜயன், பகுதி நிர்வாகிகள் டி.துரை ராஜ், ஜோ.ஜான்சன்ரோசாரியோ, நளினிகோபி, எ.ஹாஜாசெரிப், சி.ராமமூர்த்தி, என்.விஜயகுமார், வி.நரேந்திரன், நா.விஜயகுமார், ஜா.நவ்சாத். வார்டு கவுன்சிலர் ஆ.வீரபாண்டியன், வட்டச் செயலாளர் வழக்கறிஞர் வி.டி.ரவிக்குமார், இளைஞர் அணி ஜெ.தினேஷ்குமார் உள்பட பலர் உள்ளனர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குட்டப்பாளையம் மிசா கே.என்.சாமிநாதன்
### மே 24 (1986)



**கொங்கு சீமையில் பாரம்பரியமிக்க செல்வாக்குள்ள குடும்பத்தில் பிறந்தவர் எனினும், சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு, திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கியபோது தன்னையும் அதில் இணைத்துக் கொண்டு, கழகச் செயல் வீரர்களுடன் கொங்கு மண்டலத்தின் பட்டிதொட்டிகளுக்கெல்லாம் சென்று, பாமரனும் புரியும்படி நகைச்சுவையாக பேசி கழக கொள்கைகளை பரப்பியவர்.**

**1967ல் வெள்ளகோவில் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்றார்.**

**பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது, கால்நடை அபிவிருத்தி குழு உதவி தலைவராகவும் – தமிழ்நாடு தானிய சேமிப்பு கிடங்கு இயக்குநராகவும் – ஈரோடு மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநராகவும் – தாராபுரம் குளத்துப்பாளையம் கூட்டுறவு நூற்பு ஆலை தலைமை பொறுப்பு போன்ற பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றியவர்.**

**நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு கோவையில் சிறைவாசம் அனுபவித்தவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "கொங்கு நாட்டில் தலைதாழச் சிங்கமாக, தன்மான முரசாக தமிழ் இனத்துச் சுடரொளியாக வாழ்ந்த குட்டைப்பாளையத்தார்" என தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## வரிசை கட்டி நிற்கும் பல நிறுவனங்கள் - புதிய தொழில் முதலீடுகள்!

# இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடத்திற்கு வரும்!

## 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் நம்பிக்கை!

சென்னை, மே 24 -

தொழில் தொடங்க வரிசை கட்டி நிற்கும் பல நிறுவனங்கள், புதிய தொழில் முதலீடுகளால் இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதலிடத் திற்கு வந்துவிடும் என 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து 23.5.2023 தேதிய 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டிருப்பதாவது;

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் கடந்த 2 ஆண்டுகால ஆட்சி, 'தொழில் வளர்ச்சியில் தமிழ்நாட்டின் பொற்காலம்' என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில், ஒவ்வொரு மாதமும் ஏராளமான தொழில்முதலீடுகள் தமிழ்நாட்டுக்கு வந்துள்ளன. இந்த 2 ஆண்டு களில் தமிழ்நாட்டில் ரூ.2.95 லட்சம் கோடி அளவில் முதலீடுகள் செய்வதற்காக 226 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தி டப்பட்டுள்ளன. இவையெல்லாம் செயலுக்கு வரும்போது 4 லட்சத்து 12 ஆயிரத்து 565 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். எங்களை நீங்கள் தொழில் முதலீட்டுக்காக தேடிவரவேண்டும் என்று இல்லாமல், நாங்கள் உங்களைத்தேடி வருகிறோம் என்று கூறும் அளவுக்கு முதல் அமைச்சர் மு.க. ஸ்டாலின், தொழில் அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு, தொழில் துறை கூடுதல் தலைமை செயலாளர் எஸ்.கிருஷ்ணன், தொழில் வழிகாட்டி நிறுவன மேலாண்மை இயக்குனராக முன்பு இருந்த பூஜா குல்கர்னி, இப்போது அந்த பதவியில் இருக்கும் விஷ்ணு ஆகியோர் பல நாடுகளுக்கு சென்றதால் புதிய தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன.

பலதரப்பட்ட உற்பத்தி தொழில் நிறுவனங்களை கணக்கிட்டால் ஆசியாவின் 'டெட்ராய்டு' தமிழ்நாடு என்றே அழைக்கக்கூடிய அளவில் இருக்கிறது. அந்தஅளவில் சர்வதேச கனரக தொழில்நிறுவனங்கள், மினி தொழிற்பூங்காக்கள் முதல் ஏராளமான குறு, சிறு, நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் பரவலாக தமிழ்நாட்டில் இருக்கின்றன. இந்தியாவில் உற்பத்தியாகும் மொத்த மோட்டார் உதிரிபாகங்களில் 35 சதவீதம் தமிழ்நாட்டில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. கார் உள்பட மோட்டார் வாகன உற்பத்தியில் பல புகழ்பெற்ற சர்வதேச நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல் மின்னணு தொழில்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, காலணி குறிப்பாக தோல் அல்லாத காலணி உற்பத்தியிலும் தமிழ்நாடுதான் முதலிடத்தில் இருக்கிறது. தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும் மிக அதிகமாக தமிழ்நாட்டில் தொழில்முனைவோர்களாகியிருக்கிறார்கள். அதுபோல பெண்கள் தொழில் தொடங்குவதற்கும், சென்னையை சுற்றிலும் மட்டுமல்லாமல், தமிழ்நாடு முழுவதும் பரவலாக தொழில்வளர்ச்சி அடைய சிறப்பு ஊக்கமும் வழங்கப்படுகிறது. தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய மாவட்டங்களில், தொழில் தொடங்குபவர்களுக்கு பல்வேறு சலுகைகள் அரசால் வழங்கப்படுகின்றன.

கடந்த மார்ச் மாதம் நடந்த அமைச்சரவை கூட்டத்தில், ரூ.40 ஆயிரம் கோடி முதலீடுகளுக்கான 6 தொழில் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த மாதம் 2ந்தேதி நடந்த அமைச்சரவை கூட்டத்தில், தூத்துக்குடியில், மலேசியா நாட்டை சேர்ந்த பெட்ரோனாஸ் நிறுவனத்தால் ரூ.34 ஆயிரம் கோடி செலவில் அமையவிருக்கும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி தொழில் உள்பட மேலும் சில தொழில்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து திருவள்ளூர் மாவட்டம் பெருவாயலில் ரூ.1,891 கோடி செலவில் அமைய இருக்கும் 'மிட்சுபிஷி' நிறுவனத்துக்கு அடிக்கல் நாட்டிய முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் ஹூண்டாய் நிறுவனத்தின் மின்சார வாகன உற்பத்தி தொடங்கவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இதுதவிர ராயல் என்பீல்டு நிறுவனம், சிஸ்கோ என பல நிறுவனங்கள் வரிசைகட்டி தமிழ்நாட்டில் தொழில் தொடங்க இருக்கின்றன. மேலும் சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்குச் சென்று முதல் அமைச்சர் அங்கும் தொழில் முனைவோரை சந்தித்து தமிழ்நாட்டுக்கு அழைப்பு விடுக்கிறார். 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும், தொழில் முதலீடுகள் யாவையும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்று தமிழ்நாடு அவரை வாழ்த்துகிறது. இதே வேகத்தில் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி இருந்தால் இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் முதல் இடத்துக்கு தமிழ்நாடு வந்துவிடும் என்பதில் சந்தேகமேயில்லை.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.




## சே.மணிமாறன் தலைமை! செ.தமிழ்வேந்தன் முன்னிலை!

# திரு.வி.க.நகர் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – புதுக்கோட்டை விஜயா சிறப்புரை!

சென்னை, மே 24 -

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதி இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் "ஈடில்லா ஆட்சி - இரண்டாண்டே சாட்சி" சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் இன்று (24.05.2023-புதன்கிழமை) மாலை 6 மணியளவில் 72 'அ' வட்டம், திரு.வி.க.நகர் முதல் தெரு புளியந் தோப்பில் நடைபெறு கிறது. கூட்டத்திற்கு பகுதி அமைப்பாளர் சே.மணிமாறன் தலைமை வகிக்கிறார்.

பா.பி.தாஸ், ஜெ.மணிகண்டன், வி.பன்னீர்செல்வம், எம்.பிரபு, ஆர்.கிஷோர், ஜி.வினோத், சி.ஆனந்த், எம்.கார்த்திக், எஸ்.சரத்குமார், என்.வி.வேல், வி.கிரிதரன், ஆ.அரவிந்தன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

பகுதிச் செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு மற்றும் சி.மகேஷ்குமார், டி. லோகேஷ், மு.சரவணன், எம். இசட்அபோய் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இப்பொதுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர் பாபு, தலைமைக் கழகப் பேச்சாளர் புதுக்கோட்டை விஜயா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மேயர் பிரியாராஜன், கலாநிதி வீரசாமி எம்.பி., ப.தாயகம் கவி எம்.எல்.ஏ., சரிதா மகேஷ்குமார், புனிதவதி எத்திராசன், இசட் ஆசாத், லயன் பி.உதயசங்கர், பி. ஜெ.துளசிங்கம், கே.கோகுல், ஆர்.எஸ்.சித்திக், ஜெ. பாலமுருகன், பா.ஜெகதீஷ், ந.துலுக் காணம், எம். பெரோஸ் கான், பெரம்பூர் ஆர்.மகேஷ், வீரமணி, ராஜா முகமது, ரமணி லோகேஷ், எஸ்.தமிழ்செல்வி உள்ளிட்ட பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள் பங்கேற் கின்றனர்.

**GREATER CHENNAI CORPORATION**
**SPECIAL PROJECT DEPARTMENT**

சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

S.P.D.C.No.A1/0318/2023 **Re - e-TENDER NOTICE**

Re - e-Tenders are invited for the following work in Two Cover System as per details furnished below:

| Sl. No. | Selection of Service Provider for "Safe & Smart Self-Defense to Empower Girls in GCC Schools" |
|---|---|
| 1 | S.P.D.C.No.A1/0318/2023:- Approximate value of work - Rs.281.00 lakhs (Inclusive of GST) E.M.D. amount Rs.2,81,000/- |

Tender last date and time of submission 08.06.2023 up to 3.00 pm
Bid document will be available in website https://tntenders.gov.in
Tender opening date and time 09.06.2023 at 3.00 pm.


DIPR / 2702 / Tender / 2023 சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்

Superintending Engineer
(Special Project)

## மறைமலைநகரில் இன்று மாலை நடைபெறுகிறது

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

### மாவட்ட செயலாளர் –அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று 24.05.2023 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் மறைமலைநகர், பொத்தேரியில் அமைந்துள்ள எஸ்.ஆர்.எம்.ஓட்டல் கூட்ட அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., வரலட்சுமி மதுசூதனன்,எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட பொருளாளர் வெ.விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடக்கவிழா, கழகவளர்ச்சி.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று (23.5.2023) வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை கூட்டரங்கில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தலைமையில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் புதிய பேருந்து முனையத்திலிருந்து அரசு பேருந்துகளை போக்குவரத்து நெரிசலின்றி மாற்று வழிபாதையில் ஜி.எஸ்.டி சாலை வழியாக செல்வது தொடர்பாக நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை, வனத்துறை மற்றும் காவல்துறையுடன் இணைந்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசு உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.